Registered No. M—253.

அறிவு விளக்கம்.

ஓர் மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."

புத்தகம்—I. | 1901 ௵ டிசம்பர் மீ 10உ. திருவனந்தபுரம். | இலக்கம்—11.

விஷயங்கள்.

திருவாங்கூர் சமஸ்தான மந்திரியார் :—பத்திராதிபர்.
மனுப்பிரஜாபதி :—பண்டிதர், D. சவிராய பிள்ளை.
சைவாகமச் சீர்திருத்தச் சங்கம் :—சங்கவயவி.
கடைமுகம் தொடர்ச்சி :—பண்டிதர், தி. பா. சிவராம பிள்ளை.
பறவைகள் :—பி. வி. கோலப்ப பிள்ளை B. A.
இரகுவம்சம் :—அ. குமாரசாமிப் புலவர்.
விக்கிரக ஆராதனை :—இலங்குமணப் போத்திகள்.
செல்வியாள் :—A. K. கிருஷ்ணய்யங்கார்.
புத்தகக் குறிப்புகள்.
சமாசாரக் குறிப்புகள்.

பத்திராதிபர்.

வள்ளல். சோ. சிவஞான[illegible]

நாகர்கோயில் விக்டோரியா பிரஸில் பதிப்பித்து
திருவனந்தபுரத்தில் வெளியிடப்படுகின்றது.

[வருஷ சந்தா ரூ. 2.] 1901. [பத்திரிகை அணா 4.]

முக்கிய கவனிப்பு.

இப்பத்திரிகையின் முதற்புத்தகம் அடுத்த சஞ்சிகையோடு நிறைவேறுவதேனும், பத்திரிகையின் சந்தாதாருட் சிலர் இன்னும் தம் கையொப்பப் பணம் அனுப்பாமலிருக்கின்றனர் என்பதை மிக்க வியசனத்தோடுந் தெரிவிக்கின்றேன். பத்திரிகை நடை பெறுவது அவரது திரவிய சகாயம் பற்றியதன்றோ. கையொப்பக் கனவான்கள் தம் கையொப்பத் தொகையை இனியேனும் சிறிதுந் தாழாது தந்துதவப் பிரார்த்திக்கப்படுகின்றனர். 12 வது இலக்கப் பத்திரிகைக்குட் பத்திரிகையின் கிரயத்தை யனுப்பாதவர்களுக்கு அவ்விலக்கப் பத்திரிகை வி. பி. போஸ்டில அனுப்பப்படும். தயை செய்து ஆதரிப்பாராக.

பத்திரிகையின் சந்தாவை அடியிற் கண்ட விலாசத்திற்கு அனுப்புக.

ம. ா. ா. ஸ்ரீ. க. கணபதிப் பிள்ளையவர்கள்,

உண்டியல் கடை,

சாலைப் பசார், திருவனந்தபுரம்.

இங்ஙனம்,

பத்திராதிபர்.

சமாசாரக் குறிப்புகள்.

திருவிதாங்கூர் மிடில் ஸ்கூல் பரீக்ஷை.—இவ்விராச்சியத்தில் கீழ் ஜீவனங்களிற் பிரவேசிக்க விரும்புவோர்க்காக ஏற்பட்டிருந்த "பிராதமிக பரீக்ஷை"க்கு பதிலாக மேற்கண்ட பெயருடன் ஓர் புதிய பரீக்ஷை ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. இது ஆங்கிலம், தமிழ், மலையாளம் என்னும் மூன்று பாஷைகளிலும் நடத்தப்படும். இதனைத் தமிழினதும் தமிழரதும் அபிவிருத்தியைக் காருண்ய கவர்ண்மெண்டார் கருதித் தொடங்கியிருப்பதாய்க் கொண்டு தமிழ்ப் பிரஜைகள் சந்தோஷிக்கின்றனர்.

"சாணக்கிய சூத்திர" ஆராய்ச்சி அடுத்த முறை வெளிப்படும்.

அறிவு விளக்கம்.

ஓர் மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

“எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருண் மெய்ப்பொருள் காண்ப தறிவு.”

புத்தகம்—I. | 1901 ௵ டிசம்பர் ௴ 10-ௗ. திருவனந்தபுரம். | இலக்கம்—11.

திருவாங்கூர் சமஸ்தான மந்திரியார்.

கனந்தங்கிய ஸ்ரீமத் K. கிருஷ்ணசுவாமி ராயர், திவான் பகதூர் அவர்கள் தாம் இவ்வுன்னத பதவி பெற்றது முதல், மலைமேலேற்றிய விளக்கம் போலத் தமது புகழ் ஒளியை இச்சமஸ்தான எல்லையுள்ளுமே யன்றி, இதற் கப்பாலும் பரப்பினர். இவரது குணமாண்பும், குடியோம்பு முறையும், நன்னெறிச் செலவும் இந்நாட்டார் உள்ளங்களைக் கவர்வன. இவரது ராஜவிசுவாசமுஞ், சூழ்ச்சி மாட்சியுங், கரும முடிக்கு மாற்றலும் நம் அரசபெருமானால் வியக்கப் படுவன. இந நம் மந்திரத்தலைவர் இவ்வுயர் பதவிபெற்றுச் சில வருடங்களே எனினும், முன்னர்ப் பிரிட்டிஷ் இலாகாவிலும் பின்னர் இச்சமஸ்தானத்திலும் பெரிய அரிய உத்தியோகங்களை வகித்த அநுபவ முதிர்ச்சியால், அரசியலை நன்குணர்ந்த நுட்ப மதியை யுடையராய்த் திறப்பட வினைத்திறம் முடிப்பவராய் விளங்குகின்றார். வேந்தர்க்குரிய எல்லா விலக்கணங்களு நிரம்பியிருந்த காலஞ் சென்ற விசாகந்திருநாள் மஹாராஜா அவர்கள் இவரது அறிவின் மாட்சியையும் நேர்மை நெறியையுந் தாமே அறிந்து, இத்தகையார்

தமது இராச்சியத்திருப்பின் நாட்டிற்குப் பல நன்மைகளுண்டாமெனக் கருதிப், பிரிட்டிஷ் இலாகாவிலிருந்த இவரை வரவழைத்து முக்கிய நியாயாதிபதி ஸ்தானத்திலிருத்தினர். அவ்வுத்தியோக முறையில் இவரது திறமையையும், நேர்மையையும், அதியூகமதியையும் கண்டறிந்து, மாட்சி தங்கிய நமது மூலந்திருநாள் மஹாராஜா அவர்கள், இவரை மந்திரி ஸ்தானத்திற் குயர்த்தினர்.

அரசியற் றொழிலில் அமைச்சர் அரசர்க்கு இணையாவர். அத்திறம், அமைச்சியல் என்னும் பாகுபாட்டில் பத்து அதிகாரங்களால், நமது தமிழ் வேதத்தில் நன்கு விதிக்கப்பட்டுள்ளது. அத்திருவள்ளுவப் பயனின் விதிகட்குக் காட்டு என்னலாமென்பர் இவரை நன்குணர்ந்த நல்லோர். ராஜதந்திர நிபுணராகிய இப்புருஷர் "கருவியுங்காலமுஞ் செய்கையுஞ் செய்யுமருவினையும்" பொருந்த எண்ணி அரசர் மகிழக், குடிகள் வாழ, ராஜ்ய பரிபாலனம் நடத்திவருகின்றார். மந்திரிக்குரிய மதியூகமும், வினைத்திறமும், ராஜவிசுவாசமும், நன்மைகடைப்பிடியும், இவரிடத்து விளங்குவதோடு ஈசுரபக்தியுஞ் ஜீவகாருண்ணியமும் இவர்க்கு விசேஷ பூஷணங்களாக அமைந்து அலங்கரிப்பன.

இப்புருஷோத்தமரிடத்து எல்லா நற்குணங்களும் நிரம்பியவாறே அவரிடத்துள்ள தமிழ்ப்பற்றும் ஈண்டு எடுத்துரைக்கற் பாற்று. பூர்வ பாகுபாட்டின்படி, தமிழ்நாடு மூன்றனுள் ஒன்றாவது இச்சேர நாடு. இந்நாட்டு மொழி மலையாளம் என மறுபெயரைத் தாங்கித் தற்காலம் வழங்கினும், அது தமிழ்மொழியே. தமிழும் மலையாளமும் தாயும் மகவும் போற் றம்மிற் பிரிந்து தனிவாழத் தொடங்கிய காலம் சில்வினுஞ் சிலவே என்பர் அறிஞர். பற்பல நூற்றாண்டுகளாகச் சேரநாட்டுத் தமிழ் வேந்தரால் பாடப்பெற்ற நூல்கள் பல்பல தமிழ் இலக்கியப் பெருங் களஞ்சியத்தில இன்னும் விளங்கிக்கொண்டிருக்கின்றன. அங்ஙனம் தம் பூர்வவேந்தரால் பாராட்டிப் பரிபாலிக்கப்பட்ட சேரநாட்டுக்குரிய ஆதிமொழியைப் புறமொதுக்காது போற்றலுந் தங் கடமைக

ளுள் ஒன்றெனக்கருகிய இம்மகியூகி அகஙனம் தமிழை அபிவிருத்திசெய்யுமுறைகளை பலவெண்ணிச் செய்தனர், செய்கின்றனர், செய்வர். தமிழ்மாது இவர்க்கு மிக்க கடப்பாடுடையள்.

இத்தகைய நமது மந்திரத் தலைவர்க்கு, அவரது அரும்பெருந் திறல்களைப் பாராட்டி, அப்பாராட்டுதலின் அறிகுறியாக, ஆங்கில நாட்டரசரும் இந்துதேசச் சக்கிரவர்த்தியுமாகிய மஹாமாட்சி தங்கிய 7 வது எட்வர்ட் அரசரால் "இந்து தாரகை யினத்தர்" (The Companion of the Star of India) என்னுங் கௌரவபட்ட மளிக்கப்பட்டது. சி. எஸ். ஐ. என்னும் அப்பட்டத்தின் திரண்ட பொருள் 'இந்தியாவாகிய வானில் இலங்குஞ் சீரியோராகிய நட்சத்திரங்களுள் ஒருவராக வைத்து மதிக்கப்படுகிறவர்' என்பது. நமது மந்திரியார் அவரது பெருந்தகைக்கு ஏற்ப, இக்கௌரவ பட்டம் பெற்றதற்காக யாமும் மகிழ்ந்து அவர்க்கு முகமன் கூறுகின்றும். அவர் நீடூழி வாழ்க.

மனுபிரஜாபதி.

மனு என்பவர் ஒரு பெருஞ் சாதியாரின் மூல புருடர் எனவும், அவர் பூர்வந் தங்குலத்தாரொடு இக்கண்டத்து வந்து குடிபுகுந்தனர் எனவும் நமது புராண கதைகள் கூறுவன. இம்மஹா புருடர் யாவர்? அவர் எச்சாதியார்க்குத் தலைவர்? தங்கூட்டத்தோடவர் இப்பூமியில் முதற் குடிபுக்கது யாண்டை? என்பன ஈண்டு ஆராயப்படுவன.

பூர்வம் "பண்டு" என்றும் "பரதம்" என்றும் பெயரிய இக்கண்டத்துக் குடியேறிய ஜாதியார்களுட், சீரியராய் வாழ்ந்தார் ஆரியர் தமிழர் என்றிருபாலார். அவ்விரு பகுப்பாரும் ஒன்றாய்க் கலந்து, அவர்தம் மொழியும் மதமும் விரவ, ஒருங்கு வாழ்ந்த பிற்காலத்து, வடமொழிவாணர் வேறுபாடுணராமே இவ்விரு பாலாரையும் ஒருசேர "ஆரியர்" என்ற பெயரால் அழைத்தனரேனும், இவ்விருதிறத்தார் மொழியும் மதமும் ஆதியில் இவர் வெவ்வேறினத்தர் என்று விளக்கும் சாசனங்களாகின்றன. ஒரு ஜாதியாரின் சரித்திரத் தொடர்பு அறுந்தவிடத்து, அவ்வற்ற நுனியை அ

வாத முன்னினத்தார் கதையோடு சேரப் பிணிப்பது பாஷையே யாம். தமிழர் ஆரியர் என்ற இருபெருஞ் சாதியாரும் பல்லாயிர வாண்டு பரத பூமியில் ஒருங்கு கூடிக் குலாவிக் கலந்து விரவினமையின், அவரது குலோத்பத்திக் குறிகள் காலமென்னும் பிரயளத்தால் வாரிக்கொள்ளப் பட்டன. ஆயினும், பாஷைவித்பத்தி என்னும் அஞ்சனத்தால் அவை இத்தூர காலத்தும் உற்று நோக்கற் பாலன. தற்காலம், இந்தியாவிற் பற்பல பாஷைகள் பேசப்படுவனவேனும், அவை தமக்கெல்லாம் மூலமாயுள்ளன தமிழும் ஆரியமுமே. ஏனைய, ஒன்றன் பிறழ்ச்சியாலேனும், இரண்டன் உறழ்ச்சியாலேனும், பிறந்தனவாம். ஆகவே, பரதபூமியின் ஆதிமொழிகளாகிய தமிழும் ஆரியமும் அப்பாஷைகளை யுடையார் பூர்வம் வெவ்வேறினத்தர் வெவ்வேறிடத்தர் என்பதைத் தெரிக்கின்றன. இவ்விரு பான்மையாருள் தமிழர், ஆரியர்க்குமுன்னர் இந்நாட்டிற் புக்கு, ஆண்டு வதிந்த பூர்வ குடிகளை வெருட்டி யோட்டி, இதனைத் தம் முரிமைப் படுத்தினர். அவ்வனங் குடிபுக்காருள் விந்திய மலையின் வடபால் குடியேறிய தமிழரின் தலைவன் பரதன்; அவன் பெயரானே அவர் பரதர் எனவும் படுவர். ஆரியர் தம் மந்தைகளோடு தம் ஜன்ம பூமியை விட்டுப்பெயர்ந்து, முதற்கண், சிந்துநதி தீரத்தை யடைந்த காலத்து, அவ்வுத்தர கண்ட வாசிகளாகிய தமிழரது பெயரான், இப்பூமிக்குப் "பரதம்" அல்லது "பாரத வர்ஷம்" என்ற பெயரை வழங்கினர். அது தொட்டு, இக்கண்டத்தின் உத்தரபாகம் "பரதம்" எனவும், தக்கண பாகம் "பண்டு" எனவும் பெயர் பெறலாயின. இப்பூமிக்குப் "பண்டு" பண்டைப்பெயரென்பது எஜிப்து தேச பூர்வ அரச வம்ச பாரம்பரிய கதையாற் தெளியப்படும். பண்டுநாட்டரசராதலின் மாறரைப் பின்னுலார் பாண்டியர் என்றனர். இப்பண்டு பூமியில், அதாவது தக்கணபாகத்தில், வந்து குடியேறிய தமிழரின் மூலபுருடரே மனு பிரஜாபதி. பாகவத புராணம் மனு என்பவரைக் "திராவிட பிரஜாபதி" என்றழைக்கின்றது.

யாண்டிருந்து தமிழர் ஈண்டு வந்னர்? நெடுங்கால அளவிற் தமிழர் இவ் ஆதி வரன்முறையை மறக்க நேர்ந்தது. பல கற்பிதங்களோடு கலந்துள்ள புராணகதைகளில் இவரது பூர்வ வரலாறு இலைமறை காய்கள்போல் ஆங்காங்குப் புதைந்துகிடப்பது. புராண கதைகளாகிய வாயில் ஒன்றுனே உண்மைக்கதைகளை உள்ள வாறு எத்துணையும் உணர வல்லேமல்லேம்; ஆயினும் வேறுவழியின்றிப் போயினதன்று. இங்கும் பாஷை ஆர

திருஷ்டியாக நமக்குத் துணைநின் றுத
வுகின்றது. சரித்திரத்தின் அாற நனி
யைப் பாஷைஷ் மறுதலையொடு தொடுக்
கின்றது. தமிழ்ப்பாஷை தன் இல்ல
மும் இனமும் மேற்றிசைக் கண்ணே
யுள்ளனவென்று தெரிக்கின்றது.
பாஷை என்னுந் துவக்கைப்பற்றி நா
ம் தொடரின், தமிழரது இனத்தார்,
ஜீவநதிகளிரண்டினுல் நீர்பாயப்பெற்ற
செழிய பூமியாகிய பபிலோனிய,
அசீரிய நாடுகளில் ஆதியில் வதிந்தனர்
என்று தெளியப்படுவர். அதுவே த
மிழரது இல்லம். நமது புராணங்களி
ற் சிறப்பித்துக் கூறப்படும் இளாவிர்த
மும் அதுவேபோலும்! அன்றியும், ம
னுபிரஜாபதி மச்சமீர்த்துச் சென்ற
வோர் மரக் கலங்கொண்டு கடலைத்தா
ண்டிமலையில் வந்து இறங்கினர் என்று
சொல்லப்படுகின்றனர். அவ்வரலாறும்
அவர் தம் கூட்டத்தோடு அரபிக்கட
லைத் தோணி வழியாய்க் கடந்து மல
யமலையிற் றங்கினர் என்பதைப் புலப்
படுத்துகின்றது. இவ்வரலாறு பாகவ
த புராணத்திற் பின்வருமாறு கூறப்
படும் :—‘ திராவிட பிரஜாபதியா
கிய மனுவென்பவரது கலம் மலய
த்திற் றங்கிற்று.’ மச்சிய புராணமா
னது ‘மனு என்பவர் தனது கப்பலி
னின்றும் இறங்கி, மலயத்தின் ஓர் பகு
தியில் தம் பிரஜைகளின் நன்மையை
நாடி அருந்தவங்களைப் புரிந்தனர்’
என்று கூறுகின்றது.

தமிழிற்குத் திராவிடம் என்பது
ம், பொதியத்திற்கு மலயம் என்பது
ம் பரியாய நாமங்கள் எனல் யாம் இ
ங்கு விளக்க வேண்டுவ தொன்றன்று.
தமிழர் தம் ஜன்மபூமியை விட்டுப் பெ
யர்ந்து கடலைத்தாண்டி முன்னர்க் குடி
புக்க அகம் பொதிய மாதலானும், அ
ங்கு நின்றுந் தமிழர் பின்னர் நாற்றி
சையும் பரவினராதலானும், அப்பொ
திய மலையைத் தமிழிற்குப் பிறப்பிட
மெனக் கொண்டு, “பொதியிலே பிற
ந்து” என்று தமிழைப் பின்னுலாருங்
கூறுவாராயினர். ஆகவே, “பண்டு” எ
ன்னுந் தீபத்திற் குடியேறிய தமிழர்
க்கு மனு பிரஜாபதியே மூலபுருடர் எ
னவும், மனு வென்பவரும் அவர்தங்
குழுவினரும் முதற்கட் குடிபுக்க அக
ம் பொதியத்தோடு அதன்மேல்பாற் பி
ரதேசம் எனவுந் தெள்ளிதிற் றெளி
வித்தாம். இதுநிற்க.

D. S.

சைவாதீனச் சீர் திருத்தச் சங்கம்.

இச்சங்கமானது, திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள சைவப் பிரபுக்களால் 1901 ஹூ அக்டோபர் மீ 20உ யன்று மாலை 6 மணிக்கு திருநெல்வேலி கீழ ரதவீதி சரசுவதி விலாசத்தில் ஸ்தாபிக்கப் பெற்றது.

இச்சங்கத்தாரின் முக்கிய நோக்கமாவது, சைவசமய பரிபாலன கர்த்தர்களாகிய திருவாவடுதுறை, தருமபுரம், திருவண்ணாமலை, மதுரை முதலிய ஆதீன கர்த்தர்களுள் சிற்சிலர் தற்காலத்தில் தத்தமக்கேற்ற வரம்பை யறியாது, தமது பரிபாலன முறை துறந்து, உலகப் பழிப்புக் கிடந்தந்து, தர்மச் சொத்துக்களைத் தம்மொழுக்கத்திற் கடாத வீண் விவகார விஷயாதிகளில் நியோகித்து, வருகின்றார்களாதலின், இம் மடாதிபதிகளை எவ்வெவ்வாற்றாற் சீர்திருத்தஞ் செய்யற் பாலதோ அவ்வவ்வாறே சீர்திருத்தச்செய்து, தொன்று தொட்டுள்ள தர்மகாரியங்களை, வழுவாது காலமுறை கருதி நடாத்துமாறு செய்விப்பதொன்றாம்.

இச்சங்கத்தின் நிருவாக சபையாராகப் பின் வருங் கனவான்கள் சங்கத்தாரால் தெரிந்து நியமனம் பெற்றனர்:—

அக்கிராசனபதி.

ம-ா-ா-ஸ்ரீ. S. முத்தைய பிள்ளையவர்கள், ஹானரெரி மேஜிஸ்திரேட், திருநெல்.

காரியதரிசிகள்.

,, T. K. திருமலையப்ப பிள்ளையவர்கள், தேவஸ்தானகமிட்டியார், ,,
,, S. பால்வண்ண முதலியாரவர்கள், ,,
,, M. R. கந்தசாமிக் கவிராயரவர்கள், ,,

அவயவிகள்:

,, கவிராஜ நெல்லையப்ப பிள்ளையவர்கள், ,,
,, கவிராஜ ஈசுரமூர்த்தியாபிள்ளையவர்கள், ,,
,, மேடை தளவாய், திருமலையப்ப முதலியாரவர்கள், ,,
,, சங்கர நாராயண பிள்ளையவர்கள், ,,
,, சுப்பிரமணிய பிள்ளையவர்கள், பென்ஷன் முன்சீப், ,,
,, ஏ, சோணாசலம் பிள்ளையவர்கள், காடல்குடி மிட்டாதார், ,,
,, யன். பிரமநாயகம் பிள்ளையவர்கள், தேவஸ்தான கமிட்டியார், ,,
,, வி. சடகோபபிள்ளையவர்கள், வக்கீல், ,,
,, சிவசுப்பிரமணிய பிள்ளையவர்கள். ஊர்மேலழகியான்மிட்டாதார், ,,
,, என். கேசவ முதலியாரவர்கள், தர்ம கர்த்தா, ,,
,, சங்கரமூர்த்தி முதலியாரவர்கள், சைவப்பிரசாரகர், ,,
,, சிவ சூரியன் பிள்ளையவர்கள், ,,
,, திரிகூட ராஜப்பன் கவிராஜரவர்கள், மேலகரம்.
,, சொ. சுப்பிரமணியக் கவிராயரவர்கள், ,,
,, சிவந்திமன்னமார்த்தாண்ட பிள்ளையவர்கள், பண்ணையார், விஜயநாரா.
,, அம்பலவாண பிள்ளையவர்கள், பண்ணையார், சேரகுளம்.

ம-ா-ா-ஸ்ரீ-என். ஏ. வி. சோமசுந்தரம் பிள்ளையவர்கள், வக்கில், வண்ணாரப்பேட்டை.
,, வரந்தரும்பெருமாள் முதலியாரவர்கள், ஆழ்வார்குறிச்சி.
,, ஆநந்த சுந்தரம் பிள்ளையவர்கள், கிராமமுன்சீப், பேட்டை.
,, கைலாசத்திப்ப முதலியாரவர்கள். பென்ஷன்மேஜிஸ்திரேட், சிந்துபூந்.
,, ஏ. சிவஞானம் பிள்ளையவர்கள், ,,
,, சோணாசலம் பிள்ளையவர்கள், வண்ணார் பேட்டை.
,, கற்பகவிநாயகம் பிள்ளையவர்கள், கடையம்.
,, நாராயண பிள்ளையவர்கள், யூனியன் சேர்மேன், ,,
,, விநாயகம் பிள்ளையவர்கள், ,,
,, சுப்பிரமணிய பிள்ளையவர்கள், ஆண்டிப்பட்டி.
,, சொ. பழனிக் குமாருபிள்ளையவர்கள், வாசுதேவ நல்லூர்.
,, சுப்பையா பிள்ளையவர்கள், பத்தை.
,, மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையவர்கள், மிட்டாதார், ஊர்மேலழகியான்.
,, சி. இராக்கப்ப பிள்ளையவர்கள். ஜமீன் மானேசர், சேற்றூர்.
,, கல்யாண சுந்தர முதலியாரவர்கள், சிந்துபூந்துறை.
,, மு. ரா. அருணாசலக் கவிராயரவர்கள், சேற்றூர் ஸமஸ்தான வித்வான்.

இந்த 26 பேருடன் திருவாவடுதுறை ஆதீனத்துத் தம்பிரான்களாகிய ஸ்ரீமத், க. சுப்பிரமணியத் தம்பிரான் (1.) ஸ்ரீ மத், சி. சுப்பிரமணியத் தம்பிரான் (2.) ஸ்ரீ மத், சங்கரலிங்கத் தம்பிரான் (3.) ஆக முப்பத்தொன்பது பெயர்.

இச்சங்கம் ஸ்தாபிக்கப்பட்ட சொற்பக் காலத்துள் ரூபா 1000 (ஆயிரம்) வரை மூலதனஞ் சேர்க்கப்பட்டுள்ளது என்றும், சங்கத்தாரும் சைவாபிமான சிரத்தையுடன் ஊக்கத்தோடு இப்போது நன்மைக்காக உழைக்கின்றனர் என்றும் இப்பத்திரிகை வாயிலாய் உலகிற்கு வெளியிடுவதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். இச்சங்கத்தின் விவகாரங்களை அப்போதைக்கப்போது இப்பத்திரிகை வாயிலாய்த் தெரிவிக்கவுஞ் சித்தமாயிருக்கின்றேன்.

நிருவாக சபையின் ஓரவயவி.

[பத்திராதிபர் குறிப்பு]

“முயற்சி யுடையார் இகழ்ச்சி யடையார்” என்பதுண்மை; இவனுர் விடா முயற்சியுடன் தொடர்ந்து சங்கத்தின் நோக்கம் நிறைவேறும் வண்ணம் முயலுவாரெனின், கருதிய பயனுங் கைகூடிச் சைவஜனசமுகத்துக்குப் பெருநலமும் விளையு மென்பதிற் றடையில்லை. இச்சங்கத்தின் நிருவாக சபையாருட் பெரும் பாலாரை நாம் நேரில் அறிவோம். அவர்கள் பிரபுத்துவ முடைமையோடு கல்வி அறிவு ஒழுக்கமுமுடைய சைவசீலர்கள். பொது நலத்தைத் தந் நலமாகப் பாராட்டும் பெருந்தகையார். அவர்கள் நோக்கம் நன்னோக்கம் என்பது எண்டெடுத்துக் கூறவேண்டாத தொன்று. சைவாதீன மடங்களின் தற்கால மெலிவும் உலக பிரசித்த மான தொன்றேயாம்.

இவ்வாதீனத்தாருள், திருவாவடுதுறை யாதீனத்தார்க்குத் தென்னாடுகளில் பெரும் பொருள் வருவாயுள்ளன; எனினும், அம்மடம் மிகவறுமையுற்றுக் கடனுக்குட்பட்டிருப்பதை ய

தியயார்தான் வியசனியார். "ஒப்பு
ரவினல் வருங் கேடெனின் அஃதொ
ருவன் விற்றுக் கோடற்க தடைத்து"
என்ருர் நாயனர் ; அங்ஙனம் உலோ
கோபகாரச் செய்கையான் மெலிந்தன
நம்மாதீனங்கள் என்ற பெரும் புகழை
யேனும் அவை யடைந்திலவே ! இவ்
வாதீனத்தார் கையில் நம் முன்ஞேர்க
ள் தர்ம பரிபாலனத்துக்கு என்று தந்த
பொருள்கள், பூஸ் தி தி கள் பல குத்
தகை ஒற்றி யாதியநிலையிற் பராதீனப்
பட்டு வருகின்றன. நிலபலங்கள் இந்
நிலை பெறுவதாறும், ஆதீன தர்மம் ந
ன்கு நடை பெருமையாலும், அச்சொ
த்துக்கள் கவர்ண்மெண்டுக்குச் சேர்த்
துக் கொள்ளப்படுமென்று திருநெல்
வேலி கலேக்டர் துரையவர்கள் திரு
வாவடுதுறை ஆதினத்தைச் சேர்ந்த,
திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள, மட
மொன்றுக்குச்சமீபகாலத்தில் அறிக்கை
ஒன்று கொடுத்திருக்கிருர் என்று அறி
கின்ேரும். இது விஷயத்தில் சங்கத்
தார் மிகவுங் கவலையுடையவராய்க்கலே
க்டர் அவர்களுக்கு விண்ணப்பஞ்செய்
து, அவ்வாதீனச் சொத்தைக் கவர்ண்
மெண்டார் பறிமுதல் செய்வது அநீதி
என்றும்அத்தர்மம்சீர்பெறநடைபெறும்
வண்ணஞ் செயற்பாலதேதுவோ அது
வே கவர்ண்மெண்டார் சிந்திக்கத்தக்க
தென்றும் வாதாட முயலுகின்றனர்
என்றுந் தெரிகின்ேரும். சங்கத்தி
ன் இம்முதற் முயற்சிக்காக நாம் பெ
ரிதும் மகிழ்ந்து சங்கத்தார்க்கு முக
மன் கூறுகின்ேரும்.

திருநெல்வேலிச் சைவாதீனச் சீ
ர்திருத்தச் சங்கத்தார் தம் முதற்கட
மையாகத் திருவாவடுதுறை ஆதினவி
ஷயங்களைக் கவனித்து தங்குரு பீட
மாகிய அச்சைவமடத்தை நன்னிலைக்
குக் கொணர வேண்டு மென்னுஞ் ந
ற் சிந்தை யுடைய ராகின்றனர். ஆயி
ன், சைவாதீன மடங்களின் நலத்
தைக் கோரும் இச்சங் கத்தார் அம்ம
டங்களின் சீர்திருத்தங்களைப் பிறவழி
யான் முயல எண்ணுமு முன்னர், அவ்
வாதின கர்த்தராகிய பண்டார சந்நி
திகளுக்குச் சங்கத்தின் நோக்கத்
தையும் இப்பொழுது சைவாதீன ம
டங்களுக்கு நேர்ந்துள்ள குறையையும்
அவற்றைச் சீர்திருத்து முறையையும்
எடுத்து விண்ணப்பித்து தரிம்கருதும்
புகழ்தரும் வழிக்கு அவ்வாதீன கர்
த்தரை இணங்குவிக்க முயலுதல் சிற
ப்புடைத்து. இச்சீர்திருத்த முறைகள்
யாவெனப் பன்முறை நம் பத்திரிகை
வாயிலாய் வெளிப்படுத்தினும். இம்
முறையைக் கடைப்பிடித் தொழுகின்
இச்சங்கத்தாரும், அவர் கோரும் சீர்
திருத்தங்களுக்கு இணங்கின் நமது
பண்டார சந்நிதிகளும் இம்மையிலு
ம் மறுமையிலும் பெரும் புகழும் ப
யனும் அடைவர் என்று, திருவருளைச்
சிந்திக்கின்ேரும். சைவாதீன மடங்க
ளின் சீர்ப்பாட்டையும், சைவ சற்சம
யந் தழைத்தலையும், தமிழ் நாட்டின்
மேம்பாட்டையும் கருதி, அவ்வழி மு
யலுவான் நமது தமிழ் நாட்டில் ஒரு
சங்கம் ஏற்படுத்தப்பட வேண்டும் எ
ன்பதும், அதன் கிளைச்சபைகள் ஜில்
லாக்கள் தோறும் நிறுத்தப்பட வே
ண்டுமென்பதும், நம் நாட்டின் ஜமீன்
தார்களும், பிரபுக்களும், வித்வான்க
ளும், அதின் அவயவிகளாயும் திருவா
வடுதுறை பண்டார சந்நிதிகள் அத
ன் அக்கிராசனதிபதியாயும் பிரகாசி
க்க வேண்டும் என்பதும் நெடுநாள்
யாங்கொண்ட விழைவு. இவ்வெம் வி
ருப்பம் திருநெல்வேலிச் சைவாதீனச்
சீர்திருத்தச் சங்கத்தாரால் நிறைவே
றப் பெறுமெனின் அச்சங்கத்திற்குப்
புகழும் பயனும் என்றும் நிலையாம்.

299

22. உன்கட னென்கட னென்றிரண் டுண்டங் கவற்றுளொந்தாய்
உன்கட னென்னை நினைப்பிப்ப தென்ன தனைநினைப்ப
தன்கட னென்னை யுணர்விப்ப தென்ன தலையுணர்வ
தன்கட னன்புக ழோதுவிப பென்கட னோதுவதே.

23. ஓத வருணா லுணருத லுண்மை யுவந்தோல்வதொன்
றீத லடியார்க் கிரங்க லெளியார்க் கெவர்க்குமென் றுந்
தீதல் தைநினை வுன்பா லடிமைத் திறம்புரிதே
வீத லெனினுன் கழனிழற் கீழ்வரல் வேண்டுவதே.

24. வேண்டுவ தொன்று வருதலு மில்லை விழைவதொன்றே
வேண்டுவ தொன்றுப் வருகலு மில்லை விழைத்ததுவே
வேண்டுவ தொன்றய் வராதது மில்லை வெறுப்புடனே
வேண்டுத லின்றி வருவதுண் டேலென் வினையெதுவே.

25. வினையே ரதன்பய னேசதை யுண்டாம் வினைமுதலாந்
தனையே தெறுமவன் றன்முத லேதெனல் சால்புடைத்தால்
அனையே தவன்றனக் கப்பனே தங்கவன் மார்புகந்த
மனையே தவன்பெறு மக்களு மேது வழுத்திடிலே.

26. வழுத்துந் தொறும்வா யினிக்கும் வழுத்தி வழுத்தியுள்ளத்
தழுத்துந் தொறுமங் கினிக்கு முறவுமோ னட்டதிவா
விழுக்குந் தொறுமெழுந் துள்ளும் புறமுங் கசிந்தின்பமே
பழுத்தங் கினிக்கு மருந்தைப் புலவீர் பகிர்ந்துண்மினே.

27. உண்ணு முணவும் பருகும் புனலு முயிர்த்தற் கெங்கு
நண்ணும் வளியும் பிறவுந் தெரிந்தே நமக்கமைத்த
வண்ணன் மவர்க்கழல் சென்றடை தற்கென் றறிந்திலிரே
லெண்ணென் றெழுத்தென் றறிந்திர் பயனென் னியம்புமினே.

28. இயங்கும் பொழுது நிலையும் பொழுது மிருந்துகிடந்
துயங்கும் பொழுது முறங்கும் பொழுது முகந்தன்பினுன்
முயங்கும் பொழுது முழுதுந் தெரிந்தங் கெனைமுயங்கி
வயங்கும் பொருளை மறவாமை யென்றுகொல் வாய்ப்பதுவே.

29. வாய்க்கு மிடத்தை மறந்துசெத் தேற்கிடம் வாய்த்ததுதா
னோய்க்கு நொடிக்கு மிடமாய் றடக்கு துயர்க்கலுத்த

தாய்க்குந் தமர்க்குஞ் சுமையாய்ச் சுழலுந் தழற்கிரையாய்
நாய்க்கு நரிக்கும் விருந்தா யிருந்ததிந் நாயுடலே.

30. உடலென்ற வன்சிறை வைத்தனன் வைத்த வுடர்சிறையுங்
குடரென்ற சாற்றளே பூட்டினன் பூட்டுங் குடர்பற்றியங்
கடர்கின்ற வைவரைக் காவல்வைத் தானவ ரேவல்ஞற்
றொடர்கின்ற நாயோன் றிழுக்கவைத் தானென்ன தொல்லையிதே.

31. இதுவென் றறிவ னிதுவன்றி நிற்ப னிதனைவிட்டங்
கதுவென் றறிவ னதுவன்றி நிற்ப னதனைவிட்டுங்
குதுவென் றறிவ னுதுவன்றி நிற்ப னுளமுருகி
யெதுவென் றறிவ னெனவங்கு நின்ற விறைவனையே.

32. இறைவனை பெற்றையை பெண்ணையை பெண்ணுடனே கலந்த
முறைவனை மூவா முதல்வனை யூன்றி முனைக்குந் தொறு
மறைவனை யன்பின் வழிவரு மின்பநீள் வார்கடலின்
றுறைவனை யென்றுந் துணைவனை யென்னென்று சொல்லுவதே.

33. சொல்லன் றதுகணை யன்பன் றதுநாண் டொடுத்தவுள்ளங்
கல்லன் றதுவில் லறிவன்று கையுங் கடிய வினை
சொல்லென்று காட்டிற் றளன்று கண்ணக் குழிதப்பிடா
தல்லும் பகலுஞ் செய்யுட் சொல்வ தன்றபோ ராடுவதே.

34. போராடுகின்ற புலப்பகையைப் பகைபொத்திக் கொண்டே
காராடுகின்றனை நெஞ்சேயுனையுங் கடத்தற் கென்றே
காராடு கின்றதென் சொற்றொடை சாத்தினம் நம்மிறைவன்
கூராடுகின்ற நலொள்வே லெமக்குச் சொடுப்பதுண்டே.

35. கொடுப்பவன் யாவன் கொடுப்பன வாங்கிக் கொடுப்பவனைத்
தடுப்பவன் யாவன் றடுப்பவ ரின்றித் தடையினின்றும்
விடுப்பவன் யாவன் விடுத்திட லின்றி விழுந்தவிடத்
தெடுப்பவன் யாவ னவனம்மை யாளு மிறைவனன்றே.

36. அன்றன் றெனச்சொல் லறிவார் பெரிய ரவர்தமுள்ளு
மன்றென் றதுவென் றறிவார் சிறிய ரறிந்தவற்றை
யன்றென் றதன்மே லதுவென் றறிவர் பெரியரதை
யன்றென்று மாமென்றுஞ் சொல்லார் பெரியரறிந்திடினே.

இதில் ஆணும் பெண்ணும் ஒரே நிறமும் ஒரே பருமனுமுடையனவாம். செத்த மரப்பொந்துகளிலும் மலைக்குகைகளிலும் கற்பிளப்புகளிலும் கூடு கட்டி, பாசி புல் முதலியவற்றால் மெத்தை செய்து இவை முட்டையிடும். கிளிப்பிள்ளைகள் விசேஷமாய் அவுஸ்திரேலியா, பிறுங்கு, மலாக்கா முதலிய இடங்களில் அகப்படும். கிளிகளில் அனேக வர்ணமுடையன வுண்டு. அவையாவன பஞ்சவர்ணக்கிளி வெள்ளைக்கிளி, மஞ்சவறந் தலையுள்ளகிளி, சிறகிலும் கழுத்திலும் சிவப்பு வளையுள்ளகிளி முதலியனவாம். சில கிளிகட்கு அற்புதமாகப் பேசுகிற சக்தியுண்டு. அதாவது ஒரு கிளியைப் பிடித்து கூட்டிலடைத்து அதற்கு மனிதர்கள் பேசும் வார்த்தைகளைக் கற்றுக்கொடுத்தால் அவ்வார்த்தைகளை வியப்புண்டாகும்படி உச்சரிக்கும். இவ்விதம் கற்றுக்கொடுத்த ஒரு கிளிக்கு 'அதற்கு ஒரு சந்தேகமில்லை' என்பது மட்டுஞ் சொல்லத்தெரியும். இந்தக்கிளியை, சந்தையில் கொண்டுபோய், வளர்த்தவன் இதற்கு ஐம்பது பவுன் என்று விலை கூறினான். பேசுங்கிளி ஒன்று வாங்க ஆவலுள்ள ஒருவன் இந்தக் கிளியைப் பார்த்து உனக்கு ஐம்பது பவுன் விலையா என்று வினவ அப்போது அந்தக் கிளி 'அதற்கு ஒரு சந்தேகமில்லை' என்று விடை சொல்லியதைக் கேட்டு அவன் அந்தக் கிளிக்கு எல்லாம் பேசத்தெரியுமென்ற மனப்பால் குடித்து அதை விலைக்கு வாங்கினன். பிறகு அதைத் தன் வீட்டிற்குக் கொண்டுபோய் பலவிதமாய் அதனோடு பேசியும் அது எல்லாவற்றிற்கும் 'அதற்கு ஒரு சந்தேகமில்லை' என்று சொன்னது. இதை அறிந்து வெறுப்பும் கோபமுமுண்டாகி உன்னை வாங்கினவன் மடையனோ வென்று கேட்க அதற்கு அது உண்மையாக 'அதற்கு ஒரு சந்தேகமில்லை' என்று மறுபடி பகர்ந்தது.

13. மீன்கொத்திப்புள்ளானது மீன்களுள்ள ஓடையின் கரையில் ஒரு நீண்ட கொம்பு அல்லது கல்லின்மேலோ நெடுநேரம் மௌனமாய் உட்கார்ந்திருப்பதை யாவரும் கண்டிருக்கலாம். மீன்கள் தனக்கு எட்டும்படியான நிலையில் கண்டால் உடனே இப்புள்ளானது அம்புபோல் பாய்ந்து பிடிக்கும். மற்ற நேரங்களில் நீர்ப்பரப்பின்மேல் சமீபமாக பலமுறையும் அங்கு மிங்கும் பறந்து திடீரென்று தண்ணீரில் மூழ்கி மீன் முதலியவற்றைப் பிடிக்கும். மீன் தவிர தவளை, புழு, பூச்சி முதலியவற்றையும் இது சாப்பிடும். இதின் தலையும் சிறகும் பிரகாசமான நீல நிறமாயும் மற்றப் பக்கங்கள் கறுப்புச் சேர்ந்த நீல நிறமாயுமிருக்கும். வேறு நிறமுள்ள மீன்கொத்திப்புட்களு முண்டு.

14. கோழியைப் பற்றியுள்ள சகல சங்கதிகளும் எல்லோரும் நாடோறு

ம் கண்டறிக்கமைபற்றி அவற்றை இவ்விடத்தில் விடுத்தாம். பெடைக்கோழி தன் குஞ்சுகளை கூட்டிக்கொண்டு தன் நாலு புறமும் அவை சூழ்ந்து வர மெல்ல நடந்து குப்பை முதலியவற்றைக் கிண்டி அவற்றிற்கு இரை தேட வழிகாட்டவும் எதிரியான பருந்து தாக்கும்போது தன் இருசிறகாலுங் குஞ்சுகளை பாதுகாத்தற்கெழிலை பரிவுடன் புரியவும் ஆகிய இவைபோன்ற செய்கைகளை கண்ணுற எவ்வளவு ஆனந்தமாயிருக்கும். மயிற் பட்சி நிறம்பவும் அழகாயிருக்கும். இந்த வகுப்பில் ஆணுக்கும் பெண்ணுக்கும் ஒற்றுமை வேற்றுமைக் குணங்கள் அநேகமுண்டு. இது கோழி வர்க்கத்தைச் சேர்ந்தது.

15. மரங்கொத்திப் புள்ளானது பலவித வர்ணமுள்ள தூவல்களுடையது. இது மரங்களை டக் டக் டக் என்று கொத்துவது தன்னுணவுக்குரிய புழுக்களைத்தேடி. காக்கையும் ஆந்தையுமில்லாத தேசமில்லை. நீரில் நடக்கும் புள்ளினத்தைச் சேர்ந்த கொக்கின் தூவல்களுக்கு விலை அதிகம். புறாவினங்களில் பேதங்கள் ஜாஸ்தி. இவற்றில், மாடப்புறா சாலியா யிடித்து கிடக்கும் வீடுகள் வனங்கள் இவற்றில் கூடு கட்டும், கண் கவரும் நீலநிறம் பொருந்திய சிறகுகளிலிரண்டு கறுத்த வரைகள் உடையனவாய் ஆங்காங்கு சென்று சிதறிக் கிடக்கும் தானியங்களை பொறுக்கித்தின்று விரட்டும்போது 'சட புட' வென்று சிறகுகளை அடித்துக் கொண்டு பறந்துபோகும். சில புறாக்கள் பறக்கும் போது கரணங்கள் போடும். கூடிருக்குமிடத்திலிருந்து நூற்றுக்கணக்கான மயில் தூரங்கொண்டு சென்று விட்டுவிட்டாலும் மறுபடியும் வந்துவிடும்.

16. கழுகு, கிருஷ்ணன் பருந்து முதலியவற்றிற்கு சுளகு போன்ற பெரிய இறகுகள் உண்டு. இவை பெரிய மலை முகட்டிலும் மனிதர்களெளிதில் போகக்கூடாத உயர்ந்த இடங்களிலும் கூடுகட்டி ஆகாயத்தில் வெகுதூரம் உயர்ந்து வட்டமிட்டு, இறந்த மிருகங்கள் மீன்கள், தவளைகள் முதலியவற்றைத் தேடிச் செல்லும். இப்பட்சிகள் மிக்க உயரத்திலிருந்து திடீரென பூமியில் பாய்ந்து கோழிக்குஞ்சுகளையும் பாம்புகளையும் கண்மூடி விழிக்குமுன் கால்விரல்களால் தூக்கி பலமாய்ப் பிடித்து சௌகரியமுள்ள இடங்களில் சென்று அவற்றைக் கொத்தி விழுங்கும்.

17. அடைக்கலான் குருவிகள் மரத்திலும், வீடுகளிலும் வைக்கோல் முதலியவற்றால் கூடுகட்டி வாழும். இவற்றில் கறுத்த சிறகும் கறுத்த மூக்குமுண்டு. பெண்குருவி மஞ்சளும் மாவுங்கலந்த நிறமாயிருக்கும். குமரிக்கடுத்த நிலங்களிலுள்ள வானம்பாடிப் புட்கள் தமது இனிமையே பயக்கும் குற்றமற்ற பாட்டுக்களால் இரவில் இருள் நீக்கும் வெண்டிங்களின் செயிர் தீர்ந்த நிலவுபோல் கேட்போர் மனதை தெவிட்டாமல் ரஞ்சிப்பிக்கும்.

303

வயிரத்தை அதன் கடினத் தன்மையினால் கண்ணாடிமுதலிய வலு வஸ்துக்களை யறுப்பதற்கும், காரீயத்தை அதன் மிருதுத் தன்மையால் இயந்திரங்களைப் பதப்படுத்த எண்ணெய்க்கு பதிலாகவும் உபயோகிக்கிறார்கள். கரியின் பிரயோசனமோ அனந்தம். உலகத்தார் உபயோகப்படுத்தும் பலவகையான விறகுகளில் கரியமிலமே அதிகமாய்க் கலந்துளது. அதுவே நமக்குச் செயற்கையாலாகிய உஷ்ணத்தையும், ஒளியையும் கொடுக்கும் மூலமாயும், யந்திரங்களைக்கொண்டு மனிதன் தன் காரியங்களைச் சாதித்துக்கொள்ளத் தேற்ற கருவியாயும் இருக்கின்றது. நிலக்கரி யந்திரத் தொழிற்கு இன்றியமையாதது. சூரியன் நமக்கு எவ்வளவு உபயோகமுள்ளதோ அவ்வளவு உபயோகமுள்ளது இதுவும். இன்னும், அநுகூலம் யாதெனின், நமக்கு அருகிலிருப்பதும் நமது இஷ்டப்படி உபயோகப்படுத்தக் கூடியதுமா யிருப்பதன்றி ஒளியையும், உஷ்ணத்தையும், பலத்தையும், ஊக்கத்தையும் தருவதுமாகும். இவ்வாச்சரியமான சித்திகளைச்செய்து நமக்கு மிக்க உபகாரியாகும் இக்கரியமிலத்துக்கு நாஞ்செய்யுங் கைம்மாறு என்னை ?

பூர்வம் இப்பூமியிற் குடியிருந்து மறுவுலகஞ்சென்ற நமது முன்னோர்கள் இப்போது வந்து இதனைக் கண்ணுறுவாராயின், அவர்கள் ஆச்சரியப்பட்டுத் திகைக்கும்படியான அற்புதக் காட்சியை தற்காலத்தில் இது பெற்றுளதாகக் காண்பார்கள். அதிநுட்பமும் மிகக் கஷ்டமுமான கைத்தொழில்கள் யாவும் அக்கினியின் வலியால் திருத்தமாயும் ஒப்பின்றியும் நடந்தேறி வருகின்றன. மிக நுண்ணியவும் அதிருட்சமுமான யந்திரங்கள் நீராவியால் இயக்கப்பட்டு, வடதுருவத்தில் குளிரால் மெய்விதிர்க்கும் உறைபனி நாட்டாரையும், தென்றிசைக்கண் வெயிலால் உடல் தவிக்கும் பாலைநிலவாசிகளையும் ஏற்றவண்ணம் உடுப்பிக்கின்றன. கடலில் கொந்தளித்தெழுந்த பேரலைகளைத் தாண்டி, பயங்கரமான புயலும் சுழற்காற்றும் மோதியவிடத்தும், அவற்றை எதிர்பாராமல் மரக்கலங்கள் மாயமாய்ப் பறக்கின்றன. பல வண்டிகளும் இரதங்களும், மந்த ராசியாயிழுத்துச்செல்லும் எருது அசுவங்கள் இன்றி, வாயுவேகம் மனோவேகம் என்னும்படி நாஞ்சொன்ன இடத்துக்குப் போகின்றன. இவற்றை எல்லாம் பார்ப்பவர்கள் யாதோ கண்ணுக்குத் தோற்றாததோர் பூதம் மனிதன் கைக்குட் சிக்கி, அவனுக்காகச் சம்மட்டி எடுத்தடித்தும் ஆயுதங்களை எடுத்துபயோகித்தும், நிலத்தின் வழியும் நீரின் வழியும் பண்டமாற்றுதல் செய்தும், நெற்றிவேர்வை நிலந்தோயப் பாடுபட்ட அடிமைகள் மிருகங்கள் இவற்றிற்குப் பதிலாக, அரியபெரிய காரியங்களை யெல்லாஞ் செய்து முடிக்கின்றன என்று சொல்லும் வண்ணமிருக்கின்றனவே.

இரகுவமிசம்.

இரகுவமிசமென்பது சூரியன் வழித்தோன்றலாகிய இரகு வென்னும் அரசனுடைய மரபிலுள்ளார் சரித்திரத்தைக் கூறும் ஒரு காப்பியம். இதனை வடமொழியிலே செய்தவர் காளிதாச மகாகவி; அதன் வழிநூலாகத் தென்மொழியிலே செய்தவர் யாழ்ப்பாணத்திலே நல்லூரிலிருந்து அரசியல் புரிந்த பரராசசேகர மகாராசாவின் மருகராகிய அரசகேசரி என்பவர்.

இத்தமிழிரகு வமிசத்திலே சிந்தாமணி, சூளாமணி, சிலப்பதிகாரம், இராமாயணம் முதலிய காப்பியங்களிலே வருஞ் சொற்களுஞ் சொற்றொடர்களும், இரீதிகளும் பெரிதுங் காணப்படும். இந்நூலிலே திலீபமகாராசன் புத்திரப் பேறின்றிக் காமதேனுவை வழிப்பட்டுப் புத்திரனாக இரகு வென்பவனைப் பெற்றுக்கொண்ட கதையும், திலீபன் பரிமேதயாகஞ் செய்து கதியடைந்த கதையும், இரகுதிக்கு விசயஞ் செய்த கதையும், இரகுவின் மகனாகிய அயன் இராச்சியாங்கங்களோடு சென்று இந்துமதியின் மாலையீடு பெற்ற கதையும், இந்துமதியை விவாகஞ்செய்த கதையும், அப்போதெதிர்த்த அரசர்களோடு போர்செய்த கதையும், இரகு கதியடைந்த கதையும், இந்துமதி பிறவி நீங்கிய கதையும், அயன் மகனாகிய தசரதன் சாபமேற்ற கதையும், தசரதனுக்கு ஸ்ரீராமன் முதலியோர் பிறந்த கதையும், ஸ்ரீராமன் மனைவியாகிய சீதை வனம்புகுந்த கதையும், இலவண சம்புகர் கதைகளும், ஸ்ரீராமன் அவதாரம் நீங்கிய கதையும், ஸ்ரீராமன் மகனாகிய குசன் கதையும், குசன் மகனாகிய அதிதி முடிசூடி அரசியல் செய்தகதையும் விரித்துச் சொல்லப்படும். இவையன்றி வேறுசில சுருக்கியுஞ் சொல்லப்படும்.

திராவிடப் பிரகாசிகைகாரர் இரகுவமிச வரலாறு கூறுகையிலே,, அயன் படையோடெழுந்து போய் பஃறேய மன்னர் திறைகொண்டு" எனவும், "குசனயோத்தியெய்திய வரலாறும், அவன் நாகராசன் றந்த வாகுவலயங்கொண்டு நாககன்னிகையை மணந்து முடிசூடி யுலகாண்ட வரலாறும்" எனவும் எழுதினர், பஃறேய மன்னர்திறை கொண்டவன் அயனல்லனெனவும், நாககன்னிகையை மணந்த பின்வரும் முடிசூட்டுப் பலம் குசனுடைய முடிசூட்டைக் குறித்ததன்றெனவும் உணர்க.

மந்திராக்ஷரங்களால் தியானித்தல் கிரியை யென்றும், தன் சரீரத்தில் ஓர் இலட்சியத்தால் தியானித்தல் யோகம் என்றும், சர்வவியாபக பாவனையாகத் தியானித்தல் ஞான மென்றும் வகுத்து மேல்வழியுங் காட்டியிருக்கின்றனர். அறிவிற் சிறந்த மகான்கள் தம்மனுபவத்திற் கண்டதை அறிவிற் குறைந்த ஆன்மாக்கள் அறிந்து உய்யும்பொருட்டுக் கருணையால் காட்டிய இது சோபான முறையெனப்படும். சோபானம் என்பது படிக்கட்டு; உயரத்திலுள்ள ஓர் பொருளை எய்த விரும்புவோன் ஏறுதற்குக் கருவியான படிக்கட்டாக இது சொல்லப்படுகிறது. தமிழிலும் சைவசித்தாந்தத்தில் தலைமைபெற்ற ஸ்ரீ அப்பர் சுவாமிகளும், ஸ்ரீ தாயுமானவரும் முறையே "குறிகளும், அடையாளமும் கோயிலும்; நெறிகளும் அவர் நின்றதோர் நேர்மையும்; அறிய ஆயிரம் ஆரணம் ஓதினும்; பொறியிலீர் மனம் என்கொல் புகாததே." எனவும், "விரும்பு சரியை முதல் மெய்ஞ்ஞான நான்கும் அரும்புமலர் காய்கனிபோ லன்றோ பராபரமே" எனவும் அருளிய வாய்மையே தக்க சான்றாம்.

ஆனால் அப்பெரியர் கருத்து நல்லதாயினும் கருதிய பொருளை யடைவதற்குக் காட்டிய நெறிபன்னெறி யாதலால் நன்னெறியன்று இது என்பர் பிறர். ஆனால் ஓர் ஊருக்குச் செல்பவர் தங்கள் சரீர நிலைமைக்கும் சரீர சம்ரக்ஷணைக்கும் பொருந்திய மார்க்கத்தைக் கண்டு அவ்வழியே செல்லத் தலைப்படுவர். அங்ஙனம் சேறல் குற்றமன்று. அவ்வாறே ரிஷிகளும் தங்கள் வசிப்பிடத்திற்கும் தேச குணத்திற்கும் பொருந்தியவண்ணம் கஷ்டமின்றி மனதைத் தூய்மையாக்கத்தக்க பற்பல மார்க்கங்களைக் கண்டிருக்கின்றனர். அவற்றில் மேற்கூறிய விக்ரஹ ஆராதனையொன்று. இதில் ஏதேனும் கேடுண்டா வென்பதை ஆராய்வதற்கு அவ்விக்ரகத்தை யுண்டாக்கு முறைமை அதனை வழிபாட்டிற் குரிமைப்படுத்தும் கிரியைகள், அதனைப் பூஜிக்கும் அர்ச்சகர் இலக்கணம், அதற்குரிய அதிகாரிகளின் ஆசாரமுறைமை, வழிபடுவோர், கைங்கரியஸ்தரின் ஒழுக்கமாகிய இவைமுதலியவற்றை விரித்துரைக்கின்ற சிவாகமம் பாஞ்சராத்திர முதலிய தந்திரங்களைக் கற்றுணர்தல் வேண்டும். அவற்றிற் கூறப்பட்ட அபிஷேக அலங்கார திரவியங்கள், உபயோகிக்குமுறைமையால், மனிதனுக்குள்ள வியாதியை நீக்கும்; அதன் அனுஷ்டானக் கிரியைகள் அவனுக்குப் பிணிவரவொட்டாமல் தடுக்கும்; அதிற்கூறிய மந்திர ஜெபங்கள் மனதிற் சாத்துவிக குணத்தையே மேலிடச்செய்யும். இன்னும் பற்பல நன்மை

களை விளைக்குமேயன்றி ஹீனமான ப
டனே எள்ளளவும் ஈவதில்லையென்று
யதார்த்தத்தில் இயம்பக்கூடும். ஆனால்
பிற்காலத்தார் அஞ்ஞானத்தாலோ, அ
றிந்தும் சுயநயத்தை நாடியோ, பூர்
வாசாரத்திற்கு முரணிய ஒழுக்கங்க
ளையும் சதைகளையும் நுழைத்ததாற்
சிற்சில கேடுகள் உண்டாயிருக்கலாம்.
இவற்றைக்கொண்டு பூர்வானுஷ்டான
ங்கள் பழுதெனக் கோடல் அறிஞர்க்
கு அழகன்று. சாஸ்திரம் ஒருவாறிரு
ப்ப, நடைபிறிதாகக் காணத்தக்க வி
ஷயங்கள் பலவற்றை உலகெங்குங்கா
ணலாம். அங்ஙனமாகலின் முரணிய ந
டைகளை மாற்றி உரிய ஒழுக்கங்களை
உறுதிப்படுத்தலே உணர்ந்த மகான்க
ளின் கடனும். நிற்க.

மேற்குறித்த ஆகமங்களிற் சரி
யையாளருக்கு விதித்த திருத்தொ
ண்டுகளிற் புஷ்பமெடுத்தலைக் கவனி
ப்பாம். பிராதக்காலத்தில் விடிய ஐந்
து நாழிகை இருக்க, ஸ்நானஞ்செய்
து சுத்தமாகத் தினமும் நந்தனவன
ம் சென்று பூக்கொய்தல்வேண்டும். அ
க்காலத்திற் புட்பங்களின் வாசனையை
மோத்தலாலும் பசிய தளிர்களையு மல
ர்களையுங் காண்டலாலும் அயமணம்
பெற்ற ஆகாயமானது சரீரமுழுதுந்
தாக்கலாலும் மனதிற் குதூகலமுண்
டாகின்றது. அதனாற் சரீரத்திலுள்ள
பல பிணிகள் நீங்கப்பெறும். அங்ஙனமே ஐரோப்பியர்களும் அவரை
அனுசரிக்கிற அந்ய ஜாதியரும், தங்க
ள் சரீர சுகத்திற்காகத் தோட்டங்களி
ல் உலாவுகின்றனர். அந்நந்தனவனத்
தின் காற்றினுக்கும் இத்தோட்டத்தி
ன் காற்றினுக்கும் வேறுபாடு இன்றெ
னக் கொள்ளினும் முன்னையதிற் சஞ்ச
ரிக்கையில் மனதானது ஈசுவரதியா
னத்திலேயே அழுந்தியிருத்தல் கடமை
யாம். புறம்பே இன்ப முறுத்துவதா
ய பொருள்எம்மட்டுள தெனினும், அக
த்துறுப்பாகிய மனதில் தீயவை வி
ளைத்தலும் தீய குணங்களைத் தியானி
த்தலும் நிகழுமேல், அப்புறப் பொரு
ள்களால் யாது பயனு மின்று.

இனி அஷ்டாங்கபஞ்சாங்க வண
க்கத்தைச் சிறிது ஆராய்வாம். இவ்வ
ணக்கத்தால் தேகத்திலுள்ள துர்நீர்க
ள் வெளிப்பட்டுத் தேகம்வலுக்கின்ற
து. ஆனால் ஐரோப்பியர்களுள்ளும் ம
கம்மதியர்களுள்ளும் வழங்குகிற சரீ
ராப்யாசங்கள் ஒருக்கால் அபாயங்களை
விளைவிக்கும். அக்கேடின்றி அநுகூல
மையைமட்டும் அளிக்கின்ற ஆகமோ
க்த அப்பியாசத்தை அறிவாகாரமாகிய
இறைவனிடத்திற் செலுத்திய மனது
டன் செய்வமெனில், தேகாப்பியாசத்
தாற் சிறக்கின்ற தேகவலிமையுடன்
தெய்வ அருளும் கைகூடுமென்பதில்
ஐயமின்று.

ஐந்தாவது அத்தியாயம்.

ஒரு மாணாக்கனும் காப்பாளனும்.

இங்ஙனம் நிகழ்ந்து வருகையில் ஒரு நாள் இருட்டிப் பத்துப் பன்னிரண்டு நாழிகைக்குமேல் இரண்டு மனிதர்கள் தேச சஞ்சாரஞ் செய்வதற்காகத் தம்மூர் விட்டுப் புறப்பட்டுப் பல விடங்களுக்கும் போய் அவ்வத் தேயங்களின் நடைநொடி பாவனைகளையும் அங்குள்ள விசேஷங்களையுங் கண்டு கேட்ட றிவை விசாலப்படுத்திக் கொண்டும் வரும்வழியில், இவ்வூர் வந்துற்றனர்கள். தம்மை யின்னாரென்றொருவரும் அறியாதிருக்க வேண்டுமென்னும் நோக்கமுடையராயிருந் தமையால் அவர்கள் மாறுவேடம் தரித்திருந்தனர். ஒருவன் மாணாக்கனாகவும் மற்றவன் கொழுந்துந் தடித்த ஒரு குக்கிராம வாசியாகவும் தோற்றம் காட்டி வந்தார்கள். தமக்குத் தங்கியிருப்பதற்கு ஏழைகள் குடியிருக்கும் தெருவினிடையில் ஓரிடத்தைக் கொடைக்கூலிக்கு அமைத்துக் கொண்டு அதில் இருந்தார்கள். இம்மாணாக்கன் பகலிலெவ்கும் வெளிக் கொள்ளுகிறதில்லை; எப்பொழுதும் படித்துக்கொண்டு தானிருப்பன். அஸ்தமித்தபின்பு தான் தன்னுடைய கண்பனையு மறைத்துக் கொண்டு வெளியிற் போய்ச் சஞ்சரிப்பன். இவர்களை யாவரென்றொருவருந் தெரியப் பிரயாசையெடுத்துக் கொள்ளவும் ஏதுஉண்டாகவில்லை. இப்படிச் சில நாளங்குகழித்து வந்தார்கள். தோழனாக வேடஞ் சமைந்திருந்தவன் இட்டுக்கொண்ட பெயர் கோப்பண்ணு. இவன் ஓரிரவில் தனித்துத் தெருவழி வருகையில் அங்கு ஓர் சமூகமடத்திற் பலர் குழுமியிருந்து மெதுவாய்ப் பேசிக்கொண்டிருப்பதைக் கேட்டு வெளித் திண்ணையில் ஓர் மூலையிற் பதுங்கியிருந்து அவர்கள் என்ன பேசிக்கொள்ளுகிறார்கள் என்பதைக் கேட்டறிய வேண்டுமென்ற அவாவுடையவனாய் அங்ஙனஞ் செய்தான். அப்பொழுது அவர்கள் இத்தேவராட்டியின் விசேஷ சக்தியைக் குறித்துப் பேசி வியந்து மகிழ்வதைக் கேட்டான். உடனே இவன் தன் வீட்டிற்கு வந்து இச்செய்தியைத் தன்னன்பனுக்குத் தெரிவித்தான்.

கோப்பண்ணு.—"சீராளா! நீ ஒரு விசேஷங் கேட்கவில்லையே"!

சீராளன்.—"என்ன விசேஷம்? கோப்பண்ணு! சொல்லும் கேட்கட்டும்"

கோப்.—"இந்த ஊரிலே ஒரு குறி சொல்லுகிற பெண்பிள்ளை யிருக்கிறாளாம்"

சீரா.—"அதற்கென்ன? அவள் பாட்டிலே அவளிருக்கட்டுமே. உமக்கென்ன வேணும்?"

கோப்.—"அவளிருக்கட்டும் பிள்ளாய்; அவளை நான் போகச் சொல்லவில்லை; சங்கதி முழுதுங் கேளாமல் இப்படித் திண்டுக்கு முண்டு பேசுவதுதானே இந்தக் காலத்து மாணாக்கர்களுக்குச் சுபாவமாய்ப் போய் விட்டது"

சீரா.—"கோபித்துக் கொள்ளாதேயும் கோப்பண்ணு! மேற் சொல்லும் கேட்கட்டும்"

கோப்.—"அவளுடைய முகத்தைப் பார்த்தவர்கள் ஒருவருமில்லையாம்"

சீரா.—"அவளுக்கு முகமே இல்லையாயிருக்கலாம்"

கோப்.—"அடே, நீங்களெல்லாரும் அறப்படித்தவர்கள்; உங்களிடத்திலே யார் பேசுவார்கள்."

சீரா.—"நீங்களெல்லாரும் பழய நாளைப் படிப்புக்காரர்கள் அல்லவோ? நான் தெரியாமற் சொன்னால் அதைக் காரியமாக நீங்கள் கொள்ளலாமோ? அப்புறஞ் சொல்லும்"

கோப்.—"அவளழகுக்கு இரதிதேவி கூட ஈடாகமாட்டாளாம்"

சீரா.—"வேண்டாம்; அப்புறம்"

கோப்.—"நீ வேணுமென்று பாரேன். உனக்குக் கிடைக்குமோ பார்ப்போம்; சங்கதி சொல்லவந்தால் அதைக் கேளாமல் விதண்டைகள் பேசுகிறதே உனக்கு வழக்கமாய்ப் போய்விட்டது. உன்னிடத்திலேதான் இந்தச் சொல்ல வந்தேனே"

சீரா.—"சிறுவர் வாக்கைச் சாரமாகப் பெரியவாள் எடுத்துக்கொள்ளலாமோ? மேல் கதை போகட்டும்"

கோப்.—"சரி! இதை ஒரு கதையாக்கி விட்டாய் போலும்! உங்களுக்கு குறிசொல்லுகிறது, ஜோஸ்யம் சொல்லுகிறது, கோவிலில் சாமியிருக்கிறார் என்கிறது, வைத்தியன் நாடிபிடித்துப் பார்த்து வியாதி நிதானிக்கிறது, ரஸவாதம் செய்கிறது, இதெல்லாம் பொய் இரதிதேவியும் பொய், மன்மதனும் பொய், முப்பத்து முக்கோடி தேவதைகளுண்டென்பதும் பொய், சுருக்கமாய் நாங்கள் சொல்லுகிறதெல்லாம் பொய், நீங்கள் சொல்லுகிறது மாத்திரந்தான் நிசம்; சுணையில்லாமல் உன்னிடத்திலேயும் நான் செய்தி சொல்ல வருகிறேனே; என்னையல்லவோ சொல்லவேணும்"

சீரா,—"கிடக்கட்டும்; நீர் சொல்லுகிறபடி ரதிதேவி, மன்மதன், முதலானவர்களெல்லாம் சரித்திரவாயிலாய் ஸ்தாபிக்கப் பட்டிருக்

டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்,
சென்னை 600090

டாக்டர். உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை - 600090.

குழண்மையான புருஷர்களாகவே இருக்கட்டும். காரியமேற் போகட்டும் கோப்பண்ணா!"

கோப்.—"அவளுடைய குரல் குயில் போலிருக்கிறதாம்."

சீரா.—"அவள் மயில் போலிருந்தால் அவள் குரல் குயில் போலத்தானேயிருக்கவேண்டும்; சரி."

கோப்.—"நான் சொல்லுகிற ஒவ்வொரு வார்த்தைக்கும் நீ ஆட்சேபங் கூறத்தொடங்குவாயாகில் நான் ஒன்றுஞ் சொல்ல மாட்டேன்; எனக்கென்னவேணும்; அவள் எப்படியிருந்தாலென்ன? எனக்கதனால் வரவுமில்லை செலவுமில்லை. உனக்குத் தெரியப்படுத்த வேண்டுமென்று எனக்குத் தோன்றிற்று; நான் சொல்ல வந்தேன்; அதைக் கேட்க மனமிருந்தால் பேசாமல் முழுதையும் கேட்டுக்கொள்ள வேண்டும். இல்லையாகில் நான் ஒன்றும் சொல்லவில்லை"

சீரா.—"நான் வேடிக்கையாய்ச் சொன்னால் நீரதைக் காரியமாக்கிக் கொள்ளலாமா? இனி யாதொரு எழுத்துப் போலும் பேசமாட்டேன். முழுதும் கேட்கிறேன். வாய்திறந்தால் அப்புறஞ் சொல்லும்"

கோப்.—"என்ன வேணுமோ அதெல்லாம் அவள் சகாயமிருந்தால் சாதித்துக் கொள்ளலாமாம். அவளுக்குத் தெரியாத காரியமும் அவளால் செய்ய முடியக் கூடாத தொழிலும் ஒன்றுமில்லையாம். அவள் தெய்வானுக்கிரகம் ரொம்பப் பெற்றவளாம். அவளைக் கண்ணாரப் பார்த்தாலுடன் கலிதீருமாம். இந்நாட்டரசனுக்கு அவளிடத்தில் வெகு விரோத முண்டென்றும் அவளைக் கொன்றுவிட இரண்டு மூன்று தினங்களுக்கு முன் வழிதேடினான் என்றும் சொல்லுகிறார்கள். ஆனால் வெளிப்படையாய் அப்படிச் செய்ய அரசன் துணிவு கொள்ளாமலிருப்பதற்குக் காரணம் அவள் குடிகளுக்கு மிகவும் வேண்டியவளாயிருக்கிறாளாதலால் அவளைத் துன்பப்படுத்தினால் சனங்களெல்லாரும் ஒன்றாய்த் திரண்டு அரசனை எதிர்த்தாலும் எதிர்ப்பார்கள் என்று நினைத்தானாம். அவளுக்குதவிசெய்ய நாட்டிலுள்ள குடிகளெல்லாரும் உடன்பட்டிருக்கிறார்கள்போலும்," இவள் வருங்கால முணர்ந்து சொன்னால் அது பொட்டுப் போட்டாற் போலிருக்குமாம். நாளொன்றுக்கு அவளிடம் வந்து போகிற ஆட்களுக்குக் கணக்கரை

யில்லையாம். இரவிற்குளவள் புலப்படுவளாம்"

சீரா.—"கோப்பண்ணு, நீர் சொல்வதை எனக்கு நம்பத்தைரியம் உண்டாகவில்லையே. ஒரு இளம் பிராயமுடைய பெண்பிள்ளை, நாட்டையாளும் சக்கிரவர்த்தியை எதிர்க்க ஆற்றல் வாய்க்கப் பெற்றிருக்கிறுளா? இதுவும் ஒரு அதிசயந்தான். குறிசொல்பவர்களிடத்தில் எனக்குச் சிறிதும் நம்பிக்கையில்லை; அவர்கள் குடிகளை யேமாற்றி அவர் கையிலுள்ள பொருள்களைத் தட்டிப் பறித்துக் கொண்டு அவர்களைக் குழியிற்றள்ளிவிட்டு, யாருங்காணுமல் தருணம் பார்த்து ஓடிப்போகும் வஞ்சகர்களென்பதுதான் என்னுடைய உறுதியான கொள்கை. மனத்திடமில்லாத ஏழைகளையே இவர்கள் வஞ்சிக்கக் கூடும். அறிவில்லாத மூடர்களே இவர்களுடைய மந்திர சக்தியைக் கண்டு வியப்பார்கள். மந்திரமென்பது மாயமே. இவ்வுலகத்தில் மந்திரவாதிகளையும், ரஸவாதிகளையும், சோதிடர்களையும் நம்பி நாசமுற்றிருப்பவர்களுக்கு அளவில்லை. ஆனால் ஏழைகளுக் குதவியும், இன்மொழிகளால் கவலையை மாற்றியும், மன்னுயிர்களைத் தன் வசப்படுத்திக் கொள்ளவும் ஆற்றலுமுடைய இளம் பெண் ஒருத்தியிருப்பதுண்மையானால் அவள் வியக்கத்தக்கவளே. அவள் நமக்கும் ஏதேனும் துணைபுரிந்தாலும் புரிவளென்றெனக்குத் தோன்றுகிறது. என்னுடைய வருங்கால நிலைமையை முன்னறியத் தெரிந்தெனக்குச் சொன்னாலுஞ் சொல்லுவாள்." என்று சொல்லிக்கொண்டு, தன் மன உறுதி முகத்தின்வழி வெளிப்படத் திடீரென்றெழுந்து "கோப்பண்ணு! ஆனால் இன்றிரவு நானங்குபோய் வருவேன், அவளுடைய உண்மையான நிலைமை யின்னதெனத் தெரிந்துவர நான் பார்ப்பேன்"

கோப்.—"நானு முன்னுடன் வருகிறேன்?"

சீரா.—"அங்கு நான் சண்டைக்குப் போகவில்லை; ஆகலால் உம்முடைய உதவி எனக்கு ஆவசியப்படுமெனத் தோன்றவில்லை; அவள் தேவராட்டியாயும் மந்திரவாதியாயுமிருந்தாலும் அவள் பெண்பிள்ளைதானே; அவளிடத்திலிருந்தெனக்குத் தீங் கேதேனும் விளைந்தாலோ என்று நீர் பயப்பட இடமில்லை. ஆதலால் நீர் என் கூடவர வேண்டாம்; நான் தனித்துப் போய் அவள் தன்மையை

தனகதிர்ந்து வருகிறேன்" என்று சொல்லி விட்டு தேவராட்டியிருக்குமிடம் நோக்கி அதிவேகமாய்ப் புறப்பட்டான். கோப்பண்ணு "என்னுடைய அபிப்பிராயம் அற்றன்று; உன்னுடைய பிற்புறத்தைக் காக்க ஒரு பாறை மாத்திரமிருக்குமேல் இருபது பேர்கள் உருவின சத்தியும் கையுமாய் வந்து உன்னைத் தாக்கினாலும் நீயவர்களுக்கு இளைக்கமாட்டாய்; ஆயினும் வனப்புடைய ஒரு மங்கையின் கண்ணெனும் வேலின் கடைத்தாக்குக்கு நீ உயிர்தப்பிவருவாய் என்று நினைக்க எனக்குத் தைரியமில்லை" என்று முணுமுணுத்தான்

சீரா.—"என்ன கோப்பண்ணு, எதாவது சொல்லவேண்டுமென்றால் நேரே சொல்லுமே; எதற்சாக முணுமுணுக்கிறீர். நீர் கூடவந்தால் அத்தேவராட்டியைக் காணுமுன்னமே காலில்விழுந்து சாஷ்டாங்க நமஸ்காரஞ்செய்யச் சொல்லுவீர். அவளுக்குக் கற்பூரங்காட்டித் தேங்காய் பழம் நிவேதிக்கச்சொல்லுவீர். நானங்குபோவதவளைக்கண்டு தொழுவதற்கன்று. தொழற்குவேண்டிய கோயில்களிருக்கின்றன. அங்குச் சென்றால் வேண்டியமட்டுந் தொழலாம். இவள் இன்னாளென்றெனக்குத் தெரியவேண்டும். உண்மையிலிவளுக் கிக்கூறுமாற்றல்கள் உளவாயிருப்பின் அவை எதனாலுண்டாண்டாயிருக்கின்றன என்றறிந்து கொள்வதே எனது முக்கியமான கருத்து."

கோப்.—"நான் கூடவந்தால் அதற்குத் தடையென்ன? தேவராட்டியிடம் நான் உன்னைத் தனியே அனுப்புவது தகாது. அவள் சாபானுக்கிரக சக்தியுடையவளாயிருக்கிறாள். நீயோ ஒரு பெரிய முரண்டுக்காரன். அவளிடத்திற் கேட்கக் கூடாத கேள்விகளையெல்லாங் கேட்பாய். நிமிர்ந்து பேசுவாய். அவள் முன்னிலையிற் சென்று நீ கற்ற தருக்கத்தையும் வியாகரணத்தையும் உபயோகித்து அவளுடைய விவகார முறையினும் பேச்சிலுங் குற்றங் கண்டுபிடிக்கத் தொடங்குவாய். உன்னுடைய பௌதிக சாஸ்திரத் தேர்ச்சியையும் ருயநீகசாஸ்திரத் தேர்ச்சியையும் பிரசங்கித்து அவளைக் கோபமூட்டுவாய். அதனால் அவளுக்குக் கோப மேலிட்டு அவளுன்னை ஸ்தம்பன முதலிய மந்திரவித்தையினால் வாய் பேசாமலும் கைகால் அசையாமலும் நின்று போம்படிச் சபித்துவிடுவா

ள். பிற்பாடு உன்னுடையதாய் தந்தையர்களுக்கு நானன்றே பதில் சொல்லவேண்டும். ஆதலால் உன்னை நான் தனியே போகவிடேன்."

சீரா.—" இதற்குமுன் எத்தனையோ மந்திரவாதிகளையும் தெய்வங்கொண்டாடிகளையும் ஜாலவித்தைக்காரர்களையும் பார்த்திருக்கிறேன். நீர் சொன்னபடி செய்யு மாற்றலுடையவனாய் ஒருவனையும் நானிதுவரையுங் கண்டிலேன். 'காலை பொறது' என்று கூறினல் 'கயிற்றை எடு' என்ற சிறிதும் யோசியாமற் பதிலுரைப்போர்களிடம் தருக்கமும் வியாகரணமும் உண்மை விளக்கும் நூல்களும் யாது பயனளிக்கும். நியாயம் சொல்லி உம்மைப் போன்றவர்களைக் கட்டிவிடலாம் என்பது அசாத்தியம், 'மந்திரத்தில் மாங்காய்' ஒருநாளும் 'விழாது' என்பது நிச்சயம். உம்முடைய சகாயத்தைக் கொண்டு நான் போவேனுகில் அவள் என்னை விரட்டிவிரட்டி யடிப்பள் என்பதற்குச் சிறிதும் சந்தேகமேயில்லை. 'தட்டிப்பேச ஆளில்லாதவிடத்து, தம்பி சண்டப்பிரசண்ட'ஞ் செய்வதற்குத் தடையாதுளது. எனக்குத் தீங்கியாதும் வராமல் நான் பார்த்துக்கொள்ளுகிறேன். இவ்வொரு தடவைக்கு மென்னை என் மனம்போல் நடக்கவிடவேண்டும். இவளிடம் போய்ச் சில விஷயங்களைக் கேட்டறிந்துகொண்டு நானுடன் வந்துவிடுகிறேன். இவள் சொல்வதிற் புரளியேதேனுமிருப்பதாய் எனக்குப் புலப்பட்டால் நான் அவளிடம் யாதொன்றும்சொல்லாமல் மௌனமாய் வந்துவிடுகிறேன். எனக்கு விடைகொடுத்தனுப்பும்."

கோப்.—" நீ யிவ்வளவு முரண்டாய்ச் சொல்லுகிறபடியால் நானுன்னைத் தனியே அவளிட மனுப்புகிறேன். தேவராட்டிக்குக் கோபம்வரும்படியாகச் சிறிதும் நடந்துகொள்ளா திருக்கவேண்டும் அவள் முன்னிலையிற் சென்றால் ஒடுக்க வணக்கத்துடன் நிற்கவேண்டும். கேட்ட கேள்விகளுக்கு உபசாரத்துடன் விடைபகர்தல் வேண்டும். அறிவினுக்கொன்றும் அவளிடம் போடக்கூடாது. நீ இவிடம் திரும்பிவந்து சேருகிறமட்டு மெனக்கிங்கிருப்புக்கொள்ளாது. பெரியோரிடத்திற் போய் அவர்களுடைய அனுக்கிரகம் பெற்று வருவது எளிதன்று. காலம் நல்லதாயிருக்கும் பக்ஷத்தில் இவளு

டைய தரிசனத்தா லுனக்குப் பெரிய நன்மைகள் வர்தெய்தும். காலதாமதஞ் செய்யாமல் போய்வருக."

சீரா.—"உமக்கே இவ்வளவு தயவுண்டானமட்டிலும் நான் அவளுக்குச் சந்தோஷமுண்டாக்காமல் திரும்பிவரமாட்டேன். நீர் சிறிதும் கவலைப்படவேண்டாம். நான் போய் இரண்டொரு குறிகள் மாத்திரம் கேட்டறிந்து கொண்டு உடன் வந்துவிடுகிறேன். ஆனால் நான்வருவதற்குள் நீர் உறங்கிவிடலாகாது அங்கு நடந்த செய்தியனைத்தையும் உம்மிடம் சொல்லாமல் எனக்குறக்கம் வராது என்பது உமக்குத் தெரியுமே? பிரமசாரிப் பட்டத்திற் சீரிய என்னுடைய உடைகளை எடுத்துத்தாரும். அவற்றைத் தரித்துக்கொண்டு போகட்டும்"

கோப்.—"அந்த உடையைக் கண்டால் அவள் வெறுப்புறுவள். வைதிகமான உடைதரித்து நெற்றியிற் குறியிட்டுக்கொண்டு கண்டத்தில் உருத்திராக்ஷமுந் துளவமணிமாலையுமணிந்து செல்வதே அவ்விடத்திற்குத் தகும்."

சீரா.—"அற்றன்று. நாமோ இந்நாட்டுக் குடியன்று நாம் பல தேசத்திலுஞ் சஞ்சரித்துவரும் வழிப்போக்கர் வகுப்பைச் சேர்ந்தவர். விசேடமான உடையுடன்போனால் நம்மைக் கண்டு அத்தேவராட்டிக்கு அதிசயந்தோன்றும். அப்பொழுது நீ யார்? எங்குளாய்" என்று விசாரிப்பாள். காலதாமதமின்றிப் போனகாரியத்தைக் கேட்டறிந்துகொண்டு ஒருவருமறியாமல் வந்துவிடலாம். ஆதலால் அவ்வுடை தரித்துக் கொண்டு போவதே தகும்."

கோப்.—"நீங்கள் பிடிவாதக்காரர்கள் என்பது பிரசித்தம். எதற்கும் வழக்குரைப்பீர்கள், உங்களிடம் முரண்டஎங்களுக்காற்றலில்லை. ஆனால் உன் மனப்படியே செய். இதோ இருக்கிறதவ்வுடை. அணிந்துகொள்ளலாம். இவ்வுடைகளை எல்லா முடித்துச் சொல்லுவாயகில் உன்னுடைய நிச உருவம் வெளிப்படாதொழியாது. இதுவரையிலும் நாம் பூண்டிருக்கும் மறைவேடமன்றோ நம்மைக் காப்பாற்றிவருகிறது. நம்முடைய உண்மையான உருவம் புலப்பட்டால் நமக்குத் தெரிந்த காரியமே. நம்மைத் தெரிந்தவர்களிக்கு மிருக்கலாம். ஆதலால் ஒருவர் கண்ணுக்கும் புலப்படாமற் போய்வரவேண்டும்."

சீரா.—“இவ்விரவில் என்னை எவர் காணப்போகிறார்கள்? தேவராட்டியிடமாத்திரம்மே என்னுடைய நிச உருவத்தைக் காட்டவேண்டும். அதுவும் அவசரமுண்டானால் மாத்திரமே வேண்டிவரும்.”

நோப்.—“நீமணக்கோலஞ் சமைந்து போவதைப் பார்த்தால் ஒன்றும் சேராயிருக்கவில்லையே. அவள் வீட்டில் பெண்பார்க்கப் போகிறவனைப் போலன்றோ யிருக்கிறாய்.”

சீரா.—“கோப்பண்ணா. பரிகாசஞ் செய்கிறீரே. எனக்குப் பெண்பார்க்க நீரன்றோபோக வேண்டும். நான் போய்ப் பெண்பார்த்து வரும்படியான காலம் வந்துவிடவில்லையே”

கோப்.—“இந்தக் காலத்து மாணாக்கர்கள் அபிப்பிராய மப்படியன்றோ? தன்மனதிற்குப் பிடித்த பெண்ணையன்றித் தாய் தந்தையர் மனத்திற் கிசைந்த பெண்ணை விவாகஞ் செய்து வித்தல் நாகரீகமில்லாத சாதியார்களின் வழக்கமென்று நீயே என்னிடம் பலமுறை சொல்லியிருக்கிறாயே. அது மறந்து போயிற்றோ?”

சீரா.—“அஃதெனக்காக சொன்னதன்றே. பொதுப்பட உலகத்தில் நியாய வாயிலாய்ப் பார்ப்போர்க்கு அஃது புலப்படும் உண்மை என்று மாத்திரமே சொல்லியிருப்பேன்”

கோப்.—“நீயோ எடுத்ததற்கெல்லாம் நியாயவாயிலாய்ப் பார்த்துத் தீர்மானிக்க வேண்டுமே யன்றி முன்னோர் வழக்கத்தையே மேற்கோளாகக் கொண்டொழுகுவது தவறு என்று சொல்லுகிற வகுப்பினர்களுள் முந்தியனாயிருக்கிறாய். ஆதலால் உன்னபிப்பிராயமுமப்படியே இருக்கலாம், என்று கூறினேன்”

சீராளன்.—“குறித்த நேரம் வந்துவிட்டது. திரும்பி வந்தபின் இதினும் மேலான வேடிக்கைகள் பேசிக்காலம் போக்கலாம். இப்பொழுது நான் போய்வருகிறேன்.”

கோப்.—“இவனிடத்தில் வந்து இந்தச் செய்தியைச் சொன்னது இப்பொழுதெனக்கே விசாரத்திற் கேதுவாயிற்று. இனி நானிவனைத் தடுத்து திருத்துவதற் காற்றலுடையேனுமல்லேன். திருவுளவமைப்பின்படி நடக்கட்டும்” என்று தனக்குள் தானே பேசிக்கொண்டு சீராளனை நோக்கி “நின்மனதில் நீ நினைத்திருக்கும் காரியம் நன்றாக காலதாமதமின்றிப் போகும் காரியத்தை முடித்துக் கொண்டு வந்துசேர்” எனக் கூறியனுப்பினான்.

சைவசிரார்த்த விதி.

இச்சிறு நூல் வைதிக சைவ மஹாசனங்களின் உபயோகத்தின் பொருட்டு இயற்றப்பட்டது. தற்காலம் சைவசமயத்தவர் சிவாகம விதிகளை மறந்தவராய், சாஸ்திர விரோதமான சிரார்த்தகிரியையைச் செய்து அவம் போகின்றனர். சாஸ்திரோக்த விஹீனமான கிரியையைப் புண்ணியம் பயக்குமென எண்ணிச்செய்யும் ஏழை மக்கள் தாம் கருதிய பயனை யிழத்தலே யன்றி மறுமைத் துன்பத்திற்கும் ஆளாகின்றனர். தாம் வருந்தித் தேடிய பொருளை வறிதே செலவிட்டு அதன் கிரயமாக பழியையும் பாவத்தையும் நரகத் துன்பத்தையும் பெறுகின்றனர். எனை, மதியீனம் ஆதலால்நம்மவர் வைதிகசைவ நன்னெறியுணர்ந்து, நன்மை கடைப்பிடித்து, கருதிய பயனை எய்தியுய்யுமாறு, சிவாகம விதி வழி சிரார்த்த கிரியையைச் செய்யுமுறைமையைச் இச்சிறுநூல்உணர்த்துவதாம். இந்நூலின் விஷயங்கள் :—(1.) சைவ சிரார்த்த மஹிமை (2.) போலிச்சிரார்த்த மறுப்பு (3.) சிரார்த்த கர்த்தா இலக்கணம்(4.)சிரார்த்த காலங்கள்(5.)சிரார்த்த உபயோக,நிஷேத, திரவியங்கள் (6.) சிரார்த்த உபயோக, நிஷேத, பத்திர புஷ்பங்கள். (7.) சிரார்த்த தான சற்பாத்திர, அபாத்திர, பாத்திரங்கள். (8.) கிரியா விதானங்கள் (9.) நூற்பாயிரம்.

இதன் விலை அணா 4, தபாற்கூலி பிரத்தியேகம். சொற்பப் பிரதிகளே கையிருப்பிலுள்ளன. புத்தகம் வேண்டுவோர் "அறிவுவிளக்கம்" ஆபீசில் பெற்றுக்கொள்க. வி. பி. பி. வழியும் அனுப்பப்படும்.

திருவொற்றி முருகர் மும்மணிக்கோவை.

இது. சென்னைக் கிறிஸ்டியன் காலேஜ் தமிழ்ப் பண்டிதர் ம-ா-ா-ஸ்ரீ நாகபட்டினம். வேதாசலம் பிள்ளையவர்களால் இயற்றப்பட்டது. "இந்நூல், கொழுந்தமிழ்ச் சங்கச் செய்யுள் நடைவளமும், சொன்னுட்பம் பொருணுட்பங்களும், உலகியற்பொருட் பாகுபாட்டுணர்வும், அவற்றைக் கிடந்தவாறெடுத்துத் தெளிதரு மொழியும் உரைவிளக்கமும் மலிந்து தனும் பழகுநர்க்கு தமிழ்க்கொண்டு விரைஇச் செல்லும் யாத்தெழுச்சிக்குப்போற் செல்லுடை நெறித்தாய்ச் சைவ சித்தாந்த முடிவு நிலை நுட்பப்பொருளை ஆங்காங்கு அச்சுறுத்தொடு மலையாது மரபுபட இனிது விளக்கும்."

இதன் விலை 8 அணா.

புத்தகம் வேண்டுவோர் அந்நூலாசிரியரிடம் பெறுக.

புத்தகக் குறிப்பு.

இலக்கண சந்திரிகை.

இது யாழ்ப்பாணத்துச் சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவர் அவர்களாற் செய்யப்பட்டு வடமொழிச் சொற்கள் தமிழில் வந்து வழங்கும்பொழுது அவை யடையும் வேறுபாட்டைப் பற்றிப் பெரும்பாலும் கூறுகின்றது. இவ் விஷயத்தைப் பற்றிச் சொல்லிய இலக்கண நூலாருள் நன்னூலார் நன்கு கூறியுள்ளாரெனினும் அவர் கூறிய வரம்பில் அடங்காது நின்ற அநேகம் வேறுபாட்டை இஃதெடுத்துத் தொகுத்துக் கூறுகின்றது. மேலும் இந்நூலுட் கூறப்பட்ட எழுத்தேற்பாடும், சொற்பாற்பாடும், சந்திதாந்தப் பாகுபாடும் தமிழ் மாணாக்கர்க்கு மிகுந்த உபயோகமானவையே. இதில் திரட்டப்பட்டிருக்கும் பதங்கள் பஞ்ச காவியங்களிலும், தேவாரம் கல்லாடம், துறசை முதலிய நூல்களிலும் பிற்காலத்திய நூல்களிலும் பிரயோகிக்கப்பட்டன. வடமொழிச் சொற்கள் மிகுதியும் விரவியனவாகச் செய்யப்பட்டுள்ள தமிழ் நூல்களின் பயிற்சிக்கு இது அவசியமான கருவியாம்.

திருவிளையாடற் புராண சங்கிரகம்.

இந்நூலைப் படித்து மகிழ்ந்தனம். இந்நூல் பரஞ்சோதி மாமுனிவரருளிய திருவிளையாடற் புராணத்தின் கதா சங்கிரகம். முதனூலின் கதையைத் தழுவி அவ்வக் கதைகளை நீக்கிச் சுருக்கிக் கூறிய இந்நூல் 240 பாட்டுக்களால் இயன்றது. சொல்லும்பொருளுந் தொடையும் இன்பந்தருகின்றன. நவரச அலங்காரங்களின்றி நடைபெறினும் பாக்களில் பக்திரசம் பொதுளியது. பாக்களைப் படிப்பார் ஆசிரியர் பக்தியையே பெரிதும் பாராட்டிச் சென்றனர் என்பதை யறியாமற் பேசார். நூலின் இறுதியில் அமைந்துள்ள "திருவருள் வியப்பு" என்னும் பதிகம் உண்மையே வியப்பைத் தருவது. சித்தாந்தத் திரம்பித் ததும்புவது. இந்நூற்குச் சேகரம் போன்றது. நூலாசிரியரது சித்தாந்த அறிவுக்கும் சிவபக்திக்கும் அஃது சான்றாகும். நான்மாடக்கூடலின்பால் சிவபிரான் செய்தருளிய திருவிளையாடல்களை மனனஞ் செய்வார்க்கு இச்சங்கிரக நூல் பெருந்துணையாம். இந்நூலை இயற்றியவர் பாளையங்கோட்டை, ஸ்ரீ வெ. சண்முகப்பிள்ளை யவர்கள்.

இந்நூலாசிரியர் இதனைச் சுத்திய ரூபமாக இயற்றியிருப்பின் தமிழுலகிற்கு இதனினும் பெரிதும் பயன்படுமென்பது எமது அவா. இந்நூலை யச்சிடுவித்துத் தம் பொருளுதவி வெளியிட்டார் ஸ்ரீ அ. வேலுவனலிங்கம் பிள்ளை யவர்கள். பிறர்பலர் காலோசித தர்மம் யாதென்று கருதாது பெரும்பயன் பயவாத நெறிகளெல்லாம் வறிதே தம் பொருளைவாரி யிறைக்கும் இக்காலத்து, செவ்விய நெறி யல்லா விஷயங்களிற் பொருளை யிழந்து பாவங்களை வளர்க்கும் அறிவிலா அத்தகைய ஈகையாளர்க்கு இந்நண்பர் தற்காலத்துக்குரிய தர்மமின்னதென்று உணர்த்தினர். அவரது இத்திறம் யாம் புகழற்பாலதே.